மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனுமதி வராமல் உடனடியாகச் செய்ய முடியாது.

வாலாஜாப்பேட்டை பிரம்பு முடைவோர் கூட்டுறவுச் சங்கம்.

*169 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாலாஜாப்பேட்டை (வட ஆற்காடு)யில் உள்ள பிரம்பு முடைவோர் கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அதன் நிர்வாகிகள் அரசால் நியமனம் செய்யப்படுகின்றனரா, அல்லது தேர்தல் முறையில் எடுக்கப்படுகின்றனரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1957ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 27ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) சங்க நிர்வாகிகள் தொழிற் கூட்டுறவு பதிவாளரால் 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் முடிய நியமனம் செய்யப்பட்டனர். 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாளுக்கு மேல் இச் சங்கம் தேர்தல் முறையில் நிர்வாகிகளை தேர்ந்து எடுக்க அனுமதிக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாளன்று தேர்தலும் நடந்து விட்டது. சங்க விதிகளின்படி ஐந்து இயக்குநர்கள் இடம் பெறவேண்டும். அதில் 2/3 பங்கு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மீதி 1/3 பங்கு இயக்குநர்கள் நியமிக்கப்படவேண்டும். நிர்வாகிகளை இயக்குநர் அல்லது இணை இயக்குநர் நியமனம் செய்யலாம். இதன்படி மூன்று இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மீதி இருவர் அரசு சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

Hostel for students of Industrial Training Institute, Hosur.

*170 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a hostel building for the students of the Industrial Training Institute, Hosur, and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) ஒசூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்குவதற்கான நிலையான மாணவர் விடுதி கட்டுவதற்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, May I know from the Hon. Minister when it will be completed ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது பின்னாலே எந்தத் தேதியில் தொடங்கப்படும் என்று முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டியூட்களில் பணியாற்றும் ஸ்டாப்களுக்கு எல்லாம்—ஹோசூரில் மட்டுமல்ல—மற்றுமுள்ள எல்லா ஊர்களிலும் வீட்டு வசதி இல்லை என்று சொல்லப்படுகிறது. எத்தனை சென்டர்களில் இந்த வீட்டு வசதி செய்ய அரசு இந்த ஆண்டு முடிவு எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பயிற்சி பெறும் மாணவர்களுக்கு விடுதி பற்றிய கேள்வி.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு பாசனத் திட்டங்கள்.

*171 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தற்சமயம் உள்ள (**Major Irrigation, Minor Irrigation**) திட்டங்கள் யாவை ?

(இ) அவைகள் மூலம் எந்தெந்த இடங்கள் பாசன வசதி பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) பெரிய பாசனத் திட்டம் : இல்லை.

நடுத்தரப் பாசனத் திட்டம் : (1) இராமா நதித் திட்டம்.
(2) கடானா நதித் திட்டம்.
(3) கருப்பா நதித் திட்டம்.

(இ) மேற்கண்ட திட்டங்களால் பாசன வசதி பெறும் இடங்கள் :

(1) இராமா நதித் திட்டம்—அம்பாசமுத்திரம் தாலூக்கா.

(2) கடானா நதித் திட்டம்—அம்பாசமுத்திரம் தாலூக்கா.

(3) கருப்பா நதித் திட்டம்—தென்காசி தாலூக்கா, சங்கரன் கோயில் தாலூக்கா.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு மழைக் காலத்தில் தாம்பிரபரணி ஆற்றில் வெள்ளம் வந்தபோது, முக்காணிப் பகுதியில் ஒரு தேக்கம் கூட இல்லாததால் அந்தத் தண்ணீர் வீணாகி விட்டது. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு தேக்கம் கட்டி, முக்காணிப் பகுதிக்கு பாசன வசதி செய்து தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் சொல்லலாம்.